

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2025) தலைமைச் செயலகத்தில், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்காக சென்னை, தண்டையார்பேட்டை, காமராஜர் நகரில் 39 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய 96 குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு அச்சகப் பணியாளர் குடியிருப்பினை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி வெ.ஷோபனா, செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (2.12.2025) முகாம் அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது பிறந்தநாளை யொட்டி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (2.12.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ”நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



எழுத்தாளர் இமையத்தின் புதிய சிறுகதைத் தொகுப்பான ”தண்டகாரண்யத்தில் சீதை” என்ற நூலை திராவிடர் கழகத் தலைவர் கீ.வீரமணி அவர்கள் நேற்று முன்தினம் பெரியார் திடலில் வெளியிட்டார்.



நேற்று (02.12.2025) சென்னையில் உள்ள தமிழ்நாடு வக்பு வாரிய தலைமையகத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் முன்னிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் மு.நவாஸ்கனி தமிழ்நாடு வக்பு வாரியத்தின் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினர். ஜனாப். ஞஅப்துல் சமத், ஜனாப்.குலாம் முஹம்மது மெஹ்தி கான், ஜனாபா.ஹ.மஹரிபா பர்வீன். ஜனாபா.ஹ.ளு.பாத்திமா முஜப்பர். ஜனாப் ஆ.முகம்மது பஷீர் ஆகியோர் தமிழ்நாடு வக்பு வாரியத்தின் உறுப்பினர்களாகவும் பொறுப்பேற்றுக் கொண்டனர். நிகழ்வில் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்தின் செயல்பாடுகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

**சென்னை, டிச. 3 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (2.12.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

2025–26ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில், உயர் மருத்துவ சேவைகள் வழங்க மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதன்படி, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2.8.2025 அன்று சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தொடங்கி வைத்தார். இந்த உயர் மருத்துவ சேவை சிறப்பு முகாம் ஒன்றிற்கு 1.08 இலட்சம் ரூபாய் வீதம் மாநிலம் முழுவதும் மொத்தம் 1,256 முகாம்களுக்கு ரூ.13.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்முகாம்கள் சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரகப் பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சிக் குன்றிய குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூகபொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இம்முகாம்களில் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் மாநிலம் முழுவதும் இதுவரை 632 முகாம்கள் நடத்தப்பட்டு, 9,86,732 பேர் பயனடைந்துள்ளனர்.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களுக்கு வரும் மக்களுக்கு குடிநீர், இருக்கை வசதிகள், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்படுவதை உறுதி செய்திட வேண்டும் என்றும், முகாம்களுக்கு வருகை தரும் மக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கிட போதுமான அளவிற்கு தன்னார்வலர்களை நியமிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், முகாம்கள் நடைபெறுவது குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் விளம்பரம் செய்து, மக்களுக்கு முகாம்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என்றும், தாய்மார்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்காக தனியாக அறை ஏற்படுத்திட வேண்டும் என்றும், வருகை தரும் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு முகாம்களில் உரிய வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அத்துடன் இம்முகாம்களில் நோய் கண்டறியப்பட்டு, மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்படுபவர்கள் தொடர் சிகிச்சை மேற்கொள்வதை உறுதி செய்திட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை ஆணையர்

ஆர். லால்வேனா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக துணை பொதுச்செயலாளர் திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி வழிகாட்டுதலின்படி விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிந்தாமணி ஊராட்சியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா வழங்கினார். உடன் ஒன்றிய குழு பெருந்தலைவர் சங்கீதா அரசி, ஒன்றிய கழக செயலாளர் ரவிதுரை, வேம்பி ரவி, ஆர்.பி. முருகன், நகர கழக செயலாளர் நைனா முகமது மற்றும் மாவட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் – மறுவாழ்வு சேவைகள் என

# மாற்றுத் திறனாளிகள் ஏற்றம் காண அரசு எண்ணற்ற நடவடிக்கைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 3 -**

**சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தையொட்டி, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார். அதில், உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகள் பிரதிநிதித்துவம் பெறும் வகையில் சட்டத் திருத்தம், மறுமலர்ச்சிக்கான சேவைகள் உள்ளிட்டவைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருவதை சுட்டிக் காட்டியுள்ளார்.**

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:

மாற்றுத்திறனாளிகள் நலனில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு ஒவ்வொரு வருடமும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் அனுசரிக்கப்படும் டிசம்பர் 3ஆம் நாளில், மாற்றுத்திறனாளிகளுக்கான சேவைகளை அங்கீகரிக்கும் வகையில் மாநில விருதுகள் வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு சம உரிமை மற்றும் சம வாய்ப்புகள் வழங்கி அவர்கள் சமுதாயத்தில் சுயமரியாதையுடன் வாழ்வதற்கு ஏற்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. ஆண்டுதோறும் இந்நாளில் ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் முக்கிய உறுதிமொழி வெளியிடப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் “Fostering Disability inclusive societies for advancing social progress”, அதாவது “மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய சமுதாயம் வளர சமூக ஏற்றம் மலரும்” என அறிவித்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே இவ்வரசும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் எனும் உன்னத கொள்கையின் அடிப்படையில் இல்லம் தேடி உதவி வழங்கும் வகையில், உலக வங்கியின் கடன் உதவி மூலம் செயல்படுத்தப்படும் ‘தமிழ்நாடு உரிமைகள் திட்டம்’ மூலம் மாற்றுத்திறனாளிகள் பயனடைய பல்வேறு துறைகளின் சேவைகளை ஒருங்கிணைத்து, மாற்றுத்திறனாளிகள் வசிக்கும் பகுதிகளி லேயே மறுவாழ்வு சேவைகள் அனைத்தும் கிடைக்கும்வகையில், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகள் தேவைகளை கணக்கெடுப்பின் மூலம் கண்டறிந்து, பயனாளிகளுக்கு வயது மற்றும் உடல் நலத்திற்கு ஏற்ற சிகிச்சைகள் மற்றும் விருப்பத்திற்கு ஏற்ற நவீன உதவி உபகரணங்களை தன்னிறைவு எய்தும் வகையில் வழங்கி, மாற்றுத்திறனாளிகள் பிறரைச்சாராமல் தன்னம்பிக்கையுடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு மேற்கொண்டு வருகின்றது.

மேலும், மாற்றுத்திறனாளிகள் வாழ்வாதார மேம்பாட்டுக்கான பராமரிப்பு உதவித்தொகை வழங்கியும், அவர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் நகர்ப்புறம் மற்றும் கிராமங்களில் வீட்டு மனைகள் மற்றும் வீடுகளை ஒதுக்கியும், மாற்றுத்திறனாளிகள் வாழ்க்கையில் ஏற்றம் காண சமுதாயத்தை உருவாக்கும் நடவடிக்கைகளையும் இவ்வரசு மேற்கொண்டு வருகிறது.

மேலும், மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும், மாற்றுத்திறனாளிகள் பிரதிநிதித்துவம் பெறும் வகையில், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் நியமன முறையில் உறுப்பினர்களாக்கும் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, மக்கள் நலனுக்கான கொள்கைகளை தீர்மானித்து முடிவெடுக்கும் அதிகாரத்தையும் மாற்றுத்திறனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக, மாற்றுத்திறனாளிகளையும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்கி, அவர்களின் வாழ்வு மென்மேலும் ஒளிமயமாகத் திகழ நாம் அனைவரும் பாடுபடுவோம்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியம், சேந்தமங்கலம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பில் நடைபெற்ற ”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி துவக்கி வைத்து பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை அட்டைகள் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜே.யு. சந்திரகலா, ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பி.வடிவேலு , ஒன்றிய செயலாளர் எஸ்.ஜி.சி. பெருமாள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.